ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் தொடர்பூட்டல் திணைக்களம்
திகதி 2023.03.31


## கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் 2023 மாச்சில் மேலும் தளர்வடைந்தது

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (கொநுவிசு, 2021=100)[1] ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம், 2023 பெப்புருவரியின் 50.6 சதவீதத்திலிருந்து 2023 மாச்சில் 50.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. முதன்மைப் பணவீக்கத்தில் இவ்வீழ்ச்சியானது, 2023இல் பரந்தளவில் இலங்கை மத்திய வங்கியினால் எதிர்பார்க்கப்பட்ட பணவீக்க வேகக்குறைவுப் பாதைக்கு இசைவாக காணப்படுகின்றது.

| பணவீக்கம் கொநுவிசு (2021=100) | 2023 பெப்புருவரி | 2023 மாச்சு |
|---|---|---|
| சுட்டெண் பெறுமதி | 189.5 | 195.0 |
| மாதாந்த மாற்றம் (%) | 0.5 | 2.9 |
| ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் (%) | 50.6 | 50.3 |

உணவுப் பணவீக்கமானது (ஆண்டிற்கு ஆண்டு) 2023 பெப்புருவரியின் 54.4 சதவீதத்திலிருந்து 2023 மாச்சில் 47.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த அதேவேளை, உணவல்லாப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) 2023 பெப்புருவரியின் 48.8 சதவீதத்திலிருந்து 2023 மாச்சில் 51.7 சதவீதத்திற்கு அதிகரித்தது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் மாதாந்த மாற்றம், 2023 மாச்சில் 2.92 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்டதுடன் இதற்கு, 3.71 சதவீதமாகவிருந்த உணவல்லா வகையிலுள்ள பொருட்களில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்கள் காரணமாக அமைந்தன. எவ்வாறாயினும், உணவு வகை 0.79 சதவீதம் கொண்ட மாதாந்த வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது. பொருளாதாரத்தின் அடிப்படை பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு), 2023 பெப்புருவரியின் 43.6 சதவீதத்திலிருந்து 2023 மாச்சில் 39.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.


**கொநுவிசு அடிப்படையிலான பணவீக்கத்தின் அசைவு (ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம்)**




முன்னோக்கி நோக்குகையில், கிடைக்கப்பெறுகின்ற தகவல்களின் அடிப்படையில் பணவீக்கத்தின் எதிர்பார்க்கப்பட்ட வீழ்ச்சிப் போக்கானது 2023 முழுவதும் தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது. சாதகமான புள்ளிவிபரத் தளத்தாக்கத்துடன் ஒன்றிணைந்து, இறுக்கமான நாணய மற்றும் இறைக்கொள்கை வழிமுறைகள், அண்மைய செலாவணி வீத உயர்வடைதல் மற்றும் குறைவான உலகளாவிய பண்ட விலைகளின் பாரிய ஊடுகடத்தல் என்பவற்றிற்கு மத்தியில் உணவு மற்றும் சக்தி விலைகளின் மெதுவடைதல், அண்மைய எரிபொருள் விலைத்திருத்தங்களின் இரண்டாம் சுற்றுத்தாக்கங்கள் மற்றும் உள்நாட்டு வழங்கள் நிலைமைகளில் எதிர்பார்க்கப்பட்ட மேம்பாடுகள் என்பன காரணமாக குறைவடைந்த கேள்வி நிலைமைகளினால் இப்பணவீக்க வேகக்குறைப்புச் செயன்முறை துணையளிக்கப்பட்டிருந்தது.

**முதன்மைப் பணவீக்க எறிவுகள்[2]**

**கொநுவிசு, காலாண்டுச் சராசரி, ஆண்டிற்கு ஆண்டு, %**




பணவீக்க வீச்சு வரைபடமானது படிப்படியாக மங்கலடைகின்ற நிறங்களுடைய நம்பிக்கை இடைவெளிகளைப் பயன்படுத்தி அடிப்படை எறிவுப்பாதையைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மைய இங்கு தெளிவுபடுத்துகின்றது. நிலவுகின்ற உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார நிச்சயமின்மைகள் அத்துடன் புவிசார் அரசியல் பதற்றங்கள் என்பனவற்றைக் கருத்திற்கொள்கையில் தற்போதைய எறிவுகளுடன் இணையப்பெற்ற இடர்நேர்வுகள் சாதாரண காலங்களைவிட மிகவும் உயர்வானவையாகும். குறிப்பாக, அண்மைய எரிபொருள் விலைத்திருத்தங்களின் சாத்தியமான இரண்டாம் சுற்று விளைவுகள், இறக்குமதி செய்யப்பட்ட பணவீக்க மெதுவடைதல், உலகளாவிய பண்டவிலைகள் தளர்வடைதல் என்பவற்றிலிருந்து தோன்றுகின்ற அடிப்படை எறிவுகூறல்களுக்கு கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் காணப்படுகின்றன. எவ்வாறிருப்பினும், சாத்தியமான மேல்நோக்கிய இடர்நேர்வுகள் பிரதானமாக மின்சாரக் கட்டணங்களுக்கான அண்மைய மேல்நோக்கிய திருத்தங்களின் இரண்டாம் சுற்றுத் தாக்கம் எறிவுகளுக்கான மேல்நோக்கிய அழுத்தங்களைத் தீவிரப்படுத்தக்கூடும்.

*மூலம்: இலங்கை மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்*


---

[1] கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது (2021=100) மூலம் கொழும்பு மாவட்டத்தின் நகர் பிரதேசங்களிலுள்ள வீட்டலகுகளால் கொள்வனவு செய்யப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளிலுள்ள சராசரி மாற்றங்களை குறித்துக்காட்டுவதற்கு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்றது.

2 வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள எறிவுகளானது, கிடைக்கப்பெறுகின்ற தரவுகள், 2023 சனவரி எதிர்கூறல் சுற்றில் ஆக்கப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்வுகளை பிரதிபலிக்கின்றன. சிவப்புப் புள்ளிகளினால் காண்பிக்கப்பட்ட தேறிய பணவீக்க எண்ணிக்கைகள் புதிய அடிப்படையாண்டுத் தொடரின் (கொநுவிசு, 2021=100) அடிப்படையாகக் கொண்டுள்ள அதேவேளை, வீச்சு வரைபடமும், வரலாற்றுத் தரவுகளும் பழைய ஆண்டுத்தொடர்களை (கொநுவிசு, 2013=100) அடிப்படையாகக் கொண்டுள்ளன, இது, வீச்சு வரைபடத்தில் தரப்பட்ட எறிவுகளுடன் ஒப்பிடுகையில் தேறிய பணவீக்கத்தில் குறிப்பிடத்தக்க மாற்றமொன்றினை விளைவித்துள்ளது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மூலமான மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளின் வெளியீட்டுடன் இணைந்து காலாண்டு அடிப்படையில் மத்திய வங்கி அதன் நடுத்தரகால பணவீக்க எறிவுகளைத் திருத்துகின்றது. அதற்கமைய, 2023 ஏப்பிறல் எதிர்வுகூறல் சுற்றின் போது வீச்சு வரைபடம் இற்றைப்படுத்தப்படும் என்பதுடன் 2023 ஏப்பிறல் 04 அன்று நாணயக் கொள்கை ஊடக வெளியீட்டில் வெளியிடப்படும்.

[Limited Sharing]

**துணை வகைப்படுத்தல் (ஆண்டிற்கு ஆண்டு மாற்றம்) அடிப்படையில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் (2021=100)**




**கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவு (2021=100)**

| காலம் | | சுட்டெண் எண்ணிக்கை | | மாதாந்தச் சதவீத மாற்றம் | | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | மாதம் | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) |
| 2022 | ஏப்பிறல் | 142.1 | 134.2 | 9.6 | 8.6 | - | - |
| | மே | 153.6 | 142.2 | 8.1 | 6.0 | - | - |
| | யூன் | 171.7 | 154.7 | 11.8 | 8.8 | - | - |
| | யூலை | 178.9 | 160.9 | 4.2 | 4.0 | - | - |
| | ஓகத்து | 182.8 | 163.6 | 2.2 | 1.7 | - | - |
| | செத்தெம்பர் | 189.3 | 168.8 | 3.6 | 3.2 | - | - |
| | ஒத்தோபர் | 188.5 | 170.4 | -0.4 | 0.9 | - | - |
| | நவெம்பர் | 187.1 | 171.1 | -0.7 | 0.4 | - | - |
| | திசெம்பர் | 187.6 | 171.5 | 0.3 | 0.2 | - | - |
| 2023 | சனவரி | 188.6 | 172.4 | 0.5 | 0.5 | 51.7 | 45.6 |
| | பெப்புருவரி | 189.5 | 172.3 | 0.5 | -0.1 | 50.6 | 43.6 |
| | மார்ச்சு | 195.0 | 171.9 | 2.9 | -0.2 | 50.3 | 39.1 |

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்